REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 14உ வியாழன் (29—11—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 15உ வெள்ளி (30—11—56) [இதழ் 14

மூன்று மாதங்களில் 964 விபத்துக்கள்!

இந்திய இரயில்வேக்களில் நிகழ்ந்துள்ளனவாம்

"1956-ம் ஆண்டு ஜூலை முதல் செப்டம்பர் முடிய 188 பேர்களை பலியாகவும், 174 பேர் காயம்படவும் காரணமான 964 விபத்துக்கள் இந்திய இரயில்வேயில் நடைபெற்றன" என்று உதவி இரயில்வே மந்திரி அளகேசன் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இந்த விபத்துக்களினால் ரூ 20,27,592 பெறுமான இரயில்வே சொத்துக்கள் சேதமுற்றன என்றும் அவர் கூறியிருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழருக்குக் காமராசர்களால் நேரும் கேடுகள்!

'மான நஷ்டம்—பொருள் நஷ்டம்'

பிணத்தை வைத்துக் கொண்டு கேலி பேசும் போக்கு!

தோழர் ஈ. வே. கி. சம்பத் படப்பிடிப்பு

"தேவிகுளம், பீர்மேடு விவகாரத்தில், இந்த நாட்டு மக்களுடைய ஒருமித்த விருப்பத்திற்கு மாறாக இந்த மாநில மந்திரிகள் நடந்து கொண்டார்கள்.

"காமராசர், 'குளமாவது மேடாவது?' என்று கேட்டார்.

'எந்த நாட்டிலாவது அந்த நாட்டு மந்திரிகள், அந்த நாட்டின் நில உரிமைப் பிரச்சினையில் இப்படிப் பேசியதாகக் கேட்டிருக்கிறோமா? இங்குதானே கேட்கிறோம்?

"திரு-கொச்சி முதன் மந்திரி பனம்பள்ளி, தமிழ் வட்டங்கள் கேரளத்திற்கு வேண்டுமென்பதற்காக இரண்டு மணிநேரம் வாதாடியிருக்கிறார், நேருவிடம்!

'ஆனால், காமராசரும் சுப்பிரமணியமும் பதின்மூன்று நிமிடங்களில் பேசிவிட்டுத் திரும்பினர் என்று செய்திகள் கூறின.

"பதின்மூன்று நிமிடம் எதற்குப் போதும்? தேவிகுளம், பீர்மேடு முதலிய தமிழ் வட்டங்கள் தமிழ் நாட்டிற்குத்தான் சேரவேண்டும் என்பதை விளக்க பூகோளத்தையும் சரித்திரத்தையும், புள்ளி விவரங்களையும் எடுத்துக்காட்டப் போதுமா?

"இவர்கள், பண்டித நேருவின் முன் கை கட்டி வாய் புதைத்து நின்று, அவர் கூறியதற்கெல்லாம் தலையாட்டிவிட்டு வரத்தானே, அந்தப் பதின்மூன்று நிமிடங்கள் போதுமானதாயிருந்திருக்கும்?

"இவர்களைப் போகச் சொல்லிவிட்டு, அந்த டில்லிப் பெரியவர்கள் குலுங்கக் குலுங்கச் சிரித்திருப்பார்களே! இப்படிப்பட்ட ஏமாளிகளை மந்திரிகளாக்கி விட்டிருக்கும் ஒரு சமுதாயம் நமக்குக் கீழே அடிமையாகயிருக்கிறது என்று எண்ணி, அவர்கள் சிரித்திருப்பார்களே!

"இப்படிப்பட்ட மனிதர்களை ஆட்சியில் அமர்த்தியிருப்பதினால், இந்த நாட்டு மக்களுக்கு மானநஷ்டம் பொருள் நஷ்டம், எல்லா வகையான நஷ்டங்களுமல்லவா ஏற்படுகின்றன?

"இவர்கள் தமிழ் நாட்டின் அவமானச் சின்னங்களாகத் தானே காட்சி தருகின்றனர்?

பிணங்களை வைத்துக் கொண்டு கேலி பேசியவர்கள்!

"இந்த மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டும் என்பனபோன்ற கோரிக்கைகளுக்காக விருதுநகர் சங்கரலிங்கனார் உண்ணாவிரதம் இருந்தார், மடிந்தார்!

"அதுபற்றிக் கேட்டபோது, சாதாரண மனிதாபிமானங்கூட இல்லாதவகையில் காமராசர் 'சாப்பிடவில்லை; அதனால்தான் சங்கரலிங்கனார் செத்துப்போனார்,' என்று பிணத்தை வைத்துக் கொண்டு கேலி பேசினார்!

"உலகத்தில் மரணம் சம்பவிப்பது, சாப்பிடாமல் இருப்பதினால்மட்டுமில்லை; சாவு பல வழிகளிலும் வருவதுண்டு என்பதை அந்தப் பொறுப்புடையவர்கள் உணர்ந்தால் நல்லது.

"முசோலினிக்குக் கிடைத்தது போன்று, கொல்லப்பட்டு, மரக்கிளையில் தொங்கவிடப்படுவதும் சாவுதான்!

"இட்லருக்குக் கிடைத்தது போன்று, தானும் தன் மனைவியும் இனி தப்பிக்கமுடியாதென்று தெரிந்ததும், சுட்டுச் சாகடித்துக்கொண்டு, 'உடலைக் கூட எவரும் காணக்கூடாது; பெட்ரோல் ஊற்றிக் கொளுத்திவிடுங்கள்,' என்று உயில் எழுதி வைத்துப்போவதும் சாவுதான் என்பதையும், பிணத்தைக் கேலி செய்பவர்கள் உணரவேண்டும்!

நம்மிடை உலவுவோர்

'காமராசர் போன்று நம்மிடை உலவுவோரே—நமது மாநிலத்தை சேர்ந்தவர்களே நமக்கு—இந்த நாட்டு மக்களுக்குத் துரோகம் இழைப்பவர்களாக இருக்கிறார்கள்; இந்தக் கொடுமையை இன்னும் எத்தனை நாளைக்கு நாம் அனுமதிப்பது?"

இவ்வாறு தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், கடந்த 25-11-56 அன்று சென்னை 5-வது வட்ட தி மு கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நம்பிக்கை வைத்துள்ள மக்களுக்காக நாம் சட்டசபையிலும் பணிபுரிவோம்

தொழிலாளர்களின் பட்டினிப் போர்?

கல்கத்தா. நவ 28—வேலையிலிருந்து நீக்கப்பட்ட வர்களைத் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளுவது, கூலி உயர்வு தருவது போன்ற சில கோரிக்கைகள் பற்றி நிர்வாகிகள் உடனடியாகக் கவனிக்காவிட்டால், தாங்கள் 'உண்ணாவிரதப் போராட்டம்' துவங்கப் போவதாக தாமோதர் பள்ளத் தாக்குத் திட்டத் தொழிலாளர்கள் அறிவித்திருக்கின்றனர்.

மாட்டுக்கு மூக்கணாங் கயிறுபோல ஆட்சிக்கு எதிர்க் கட்சி

அண்ணா கருத்துரை

"மாட்டுக்கு மூக்கணாங்கயிறு; ஆற்றுக்குக் கரை; வீட்டுக்கு வாசல்; வாசலுக்குக் கதவு; கதவுக்குத் தாழ்ப்பாள்—இவை எத்தனை அவசியமோ அத்தனை அவசியம், ஆட்சிக்கு எதிர்க் கட்சி, ஒரு ஜனநாயக அரசியல் அமைப்பில்!

"இந்த அவசியம் காரணமாகத்தான், தி. மு. கழகம், ஒரு எதிர்க் கட்சி என்ற நிலையில் தேர்தலில் நிற்கிறது—150 இடங்களுக்குப் போட்டியிடுகிறது.

"நாம்தான் காங்கிரசுக்கு உள்ள எதிர்க் கட்சி என்று, காங்கிரஸ் மந்திரிகள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்!

"இன்று பேசுகிற எந்த மந்திரியும், தி. மு. கழகத்தைப் பற்றித்தான் பேசுகிறார்கள்; மற்றக் கட்சிகளைப் பற்றி அவர்கள் பேசுவதில்லை. இப்படிக் கூறுவதினாலேயே, மற்ற கட்சிகளை நான் மட்டமாகக் கருதுகிறேன் என்று அர்த்தமில்லை—நான் அப்படிக் கருத மாட்டேன்.

"பேசுகிற மந்திரிகள் எல்லாம் பி. சோ. கட்சியையோ, கம்யூனிஸ்டு கட்சியையோ பற்றிப் பேசுவதாகக் காணோம் என்ற நிலையைத்தான் குறிப்பிடுகிறேன்."

—என்று, அண்ணா அவர்கள், கடந்த 24—11—56 அன்று சென்னைக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து பேசிய அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

மற்ற கட்சிகள்!

"இன்று, இங்குள்ள மற்ற கட்சிகள் எல்லாம், இருக்கிற நிலையை மாற்றியமைக்க — பழுதுபார்க்க விரும்புகின்றன; ஆனால் நாம், புதிதாக ஒன்றை நிறுவப் போராடுகிறோம்.

"இப்போதிருக்கிற நேரு சர்க்காரைத் திருத்தியமைக்க அந்தக் கட்சிகள் எல்லாம் முயற்சிக்கின்றன; ஆனால், நாம், நேரு சர்க்காருக்கு இந்த நாட்டில் உள்ள ஆதிக்கத்தைத் தொலைத்து, முழு உரிமையும் சுதந்திரமும் கொண்ட புதிய சர்க்காரை நிறுவ வேண்டும் என்று கோருகிறோம்.

என்ன செய்யச் சொல்லுகிறார்கள்?

"நாம், வரப்போகும் இந்தத் தேர்தலில் கலந்துகொள்ளக் கூடாது என்று கூறுகிறவர்கள், வளர்ந்திருக்கிற இந்தக் கட்சியை என்ன செய்யச் சொல்லுகிறார்கள்?

"குலை தள்ளிய வாழை நமக்குப் பயன்படக்கூடாது என்கிறார்களா? காய் முற்றிப் பழுத்து, வௌவால்களுக்குத் தீனியாகவேண்டுமா?

"சென்ற தேர்தலில்தான், வாழைக்கனி, உற்றுருக்குக் கிடைக்கவில்லை. இராமசாமிப் படையாச்சி, மாணிக்கவேலர் போன்ற வௌவால்களுக்குக் கிடைத்தது. இப்போதும் அப்படித்தான் நடக்கவேண்டுமென்கிறார்களா?

"எனவே, நாம் தேர்தலில் ஈடுபடுவது குறித்து ஆட்சியாளரும்

(4-ம் பக்கம் பார்க்க)

★★

நமது முதல் மாநில மாநாடு நடைபெற்ற

S. I. A. A. திடலில்

[சென்னை பார்க்டவுன்—பொருட்காட்சி மைதானம்]

டிசம்பர் 9 — கலை நிகழ்ச்சி

ஏற்பாடாகிவிட்டது

★

தித்திக்கும் செய்தி என்கின்றனர் தோழர்கள்!

தேர்தல் நிதி திரட்ட

கலை நிகழ்ச்சி ★ டிசம்பர் 9!

கே. ஆர். இராமசாமி எம். ஜி. இராமச்சந்திரன்
டி. வி. நாராயணசாமி எஸ். எஸ். இராசேந்திரன்

தத்தமது குழுவினருடன் கலைவிருந்து அளித்து, கழகத்திற்கு அன்புக் காணிக்கை அளிக்க முன்வந்துள்ளனர்

★

ஆர்வமிகு தோழர்காள்! அன்புக்குரிய நண்பர்காள்!

உங்கள் பங்குதர உவகையுடன் வருக! வருக!

டிசம்பர் 9! டிசம்பர் 9!

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 29—11—'56 வியாழன்

நியாயந்தான் என்ன?

தமிழ் மக்களின் நலன்களைக் காப்பதிலும், தமிழர்களுடைய நல்வாழ்விற்கு வழிவகைகளைச் செய்து தருவதிலும் வடவர் ஏகாதிபத்தியமான இந்தியப் பேரரசிற்கு இருந்துவரும் ஓரவஞ்சனையை, நாம் வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம். இதே பணியினை, காங்கிரசுக் கட்சிக்குள்ளாகவே இருந்துவரும் தமிழ்ப் பண்பு அறவே பட்டுப் போகாதவர்களும், மெல்லிய குரல் கொண்டு கோரியும் வந்துள்ளனர்.

ஆனால், இந்தியப் பேரரசோ, தனது சுபாவத்தை மாற்றிக் கொள்ள மறுத்து, தமிழ் மக்களின் விருப்பங்களை தம் காலில் போட்டு மிதிப்பதையே ஒரு பொழுதுபோக்கு நடவடிக்கையாகக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்களின் நலமென்றாலும் தமிழ் மக்களின் கண்ணீரென்றாலும், அவைகளை வேண்டுமென்றே அலட்சியப்படுத்த வேண்டும் என்றக் கெடுமதியுடனேயே இந்தியப் பேரரசு செயல்பட்டு வருவதையே நாம் மீண்டும் மீண்டும் வேதனையுடன் கண்டு வருகிறோம்.

இந்தியப் பேரரசின் சார்பில் பிறநாடுகளுக்குத் தூதுவர் செல்வது என்பது, அங்கெல்லாம் இந்தியப் பிரதமருடையவும் காங்கிரஸ் ஆட்சியினுடையவும் அருமை பெருமைகளைப் பசனை செய்துகொண்டு இருப்பதற்காக மட்டுமல்ல; அந்த அமைப்பின் மற்றும் பல பணிகளில், அப்படிப் புகழ்பாடுவதும் ஒன்றேயாகும்.

ஆனால், பிறநாடுகளில் இப்பொழுது இருந்துவரும் இந்தியத் தூதுவரமைப்புகளில் பெரும்பாலானவை, இந்தியப் பிரதமருக்குக் கட்டியங்கூறி வருவதையே முதன்மையாகக் கருதிச் செயல்பட்டு வருகின்றன எனக் குறிப்பிடுவது மிகைபடக் கூறியதாகாது. அதற்கொப்ப, அவ்வாறு கட்டியங்கூறுவதற்குரிய குணச் சிறப்பு இயல்பாகவே உடையவர்களாகப் பார்த்துத்தான், பிற நாடுகளுக்குத் தூதுவர்களாக நியமிப்பது என்ற எண்ணத்திலும் இந்தியப் பேரரசு செயல்பட்டும் வருகிறது. திற்க,

தூதுவர்களாக நியமிக்கப்படுகிறவர் ஒவ்வொருவரும் எந்தெந்த நாடுகளுக்குத் தனித்தனியாகத் தூதுவர்களாக நியமனம் பெறுகிறார்களோ, அந்தந்த நாட்டின் மொழியினைக் கூடுமானவரை கற்றுத் தெரிந்தவர்களாக இருத்தல் முக்கியத் தேவையாகும். அதைவிடக் கட்டாயமாக இருந்து தீர வேண்டியது, அந்தந்த நாடுகளில் பெரும்பான்மையினராகக் குடியேறியுள்ள இந்தியத் துணைக் கண்டத்துக் குடிமக்களின் மொழிவழிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பது. அவ்வாறு இருந்தால்தான் பிற நாடுகளில் குடியேறியுள்ள இந்தியத் துணைக் கண்டத்துப் பலவகைப்பட்ட மொழி மக்களிடம் பற்றுதலுடனும் பாசத்துடனும் இதய பூர்வமாகக் கலந்துறவாடுவது சாத்தியமாகும்.

இவ்வாறு நாம் குறிப்பிடுவது, இந்திய அரசியல் சட்ட அமைப்புக்கும் உணர்வுக்கும் ஒவ்வாததாக இருக்கக்கூடும். ஆனால், கண்ணுக்கு முன்பாக நாட்டில் கண்டுவரும் அனுபவ உண்மைக்கு, மேலெடுத்துக் காட்டியுள்ள தூதுவர்களுக்குத் தேவைப்படும் தகுதி ஒருக்காலும் முரண்பட்டதாக இருக்கமுடியாது.

பிற நாடு ஒவ்வொன்றிலும் குடியேறி வாழ்ந்து வரும் இந்தியக் குடிமக்களின் மொழிகளைக் கற்றிருப்பவர்களாக, ஆங்காங்கே அனுப்பப் பெறும் இந்தியத் தூதுவர்கள் இருப்பதே சிறப்புடையது என்ற பொதுவிதியை, இந்தியப் பேரரசு ஒரு பொது நடைமுறையாக ஏற்க முன்வந்தாலும் முன்வராமல் போனாலும், தமிழ் நாட்டு மக்கள் குடியேறியுள்ள சிங்கப்பூர், பர்மா, சிலோன்போன்ற நாடுகளுக்கு தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ் மக்களைத் தூதுவர்களாக நியமிக்க அப்பேரரசு முன்வந்தாக வேண்டும். அப்பொழுதுதான், தமிழ் மக்களின் குறைகளை இதயத்துடிப்புடன்உணர்ந்து அவர்களுக்குப் பாதுகாப்புத் தேடக் கூடிய வகையில், தங்களுடைய கடமையைச் செம்மையாகவும், துரிதமாகவும் செய்யக்கூடிய தூதுவர்களைப் பெறுவது சாத்தியமாகும். அத்தகையவர்களை அன்புடன் அணுகுவதும் நம்பிக்கையுடன் நாடுவதும், மேல்குறிப்பிட்ட மூன்று நாடுகளிலுமுள்ள தமிழ் மக்களுக்கும் இயலக்கூடும்.

சிலோன் தீவில் குடியேறியுள்ள இந்தியக் குடிமக்களில் பெரும்பான்மையினர் தமிழ் மக்களேயாவர். அவர்களுக்கு அந்நாட்டு அரசாங்கத்தால் ஏற்பட்டுவரும் அல்லல்களுக்கு எல்லையே கிடையாது. அந்த அல்லல்கள் இன்றுவரை தீர்க்கப்படாமலே இருந்து வருகின்றன.

இழைக்கப்பட்டுவரும் கேடுகளிலிருந்து தாங்கள் காப்பாற்றப்படுவோம் என நம்பிக்கை கொள்வதற்குக்கூட முடியாத நிலையில், அங்குள்ள தமிழ் மக்கள் தவித்துக் கிடக்கிறார்கள். தமிழர் ஒருவரை அங்கு இந்தியத் தூதுவராக நியமிப்பதின் மூலந்தான், அவர்களிடத்தில் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் மீண்டும் உருவாக்க முடியும்.

ஆனால் இந்தியப் பேரரசோ, தனது தூதுவராக ஒரு தேசாயையும், பின்னர் ஒரு சக்கரவர்த்தியையும் நியமித்து வந்திருக்கிறது. அவ்வழியையே பின்பற்றி இப்பொழுதும் ஒரு குண்தேவியாவை நியமித்து விட்டிருக்கிறது.

இப்படி தமிழும் தெரியாது, தமிழ் மகனாகவும் பிறக்காது, தனது அன்புக்கு மட்டுமே பாத்திரமாக இருக்கிறவர்களை இலங்கை தீவிற்குத் தூதுவர்களாக அனுப்புவது, வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும். அதுவுமன்றி, இலங்கை வாழ் தமிழ் மக்களின் துயர் துடைப்பதில் உள்ள அக்கறையைவிட, நாம் துவக்கத்தில் கூறியதுபோல் தனது புகழை சிங்களத் தீவில் பரப்புவதற்கேற்ற நபரை நியமிப்பதில்தான் இந்தியப் பேரரசிற்கு அக்கறை அதிகமிருக்கிறது என்றக் குற்றச்சாட்டும் உறுதியாகிறது.

இலங்கைவாழ் இந்தியத் தமிழ் மக்களின் குறைகளைக் களைந்து, நல்வாழ்வுதேடித்தரும் தகுதியும் திறமையும் கொண்ட இந்தியப் பேரரசின் நன்னம்பிக்கையையும் நல்லாதரவையும் பெற்ற, இலங்கை இந்தியத் தூதுவராக நியமனம் பெறத் தக்க அருகதையுடைய எந்தத் தமிழ் மகனும் தமிழ் நாட்டில் இல்லையா? இந்தியப் பேரரசு இவ்வாறுதான் எண்ணிக் கொண்டிருக்கிறதா? தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை அலட்சியப்படுத்தி, குண்தேவியாவை இலங்கைத் தூதுவராக நியமிக்க இந்தியப் பேரரசு முன்வந்திருப்பதற்குத் தக்க நியாயம்தான் என்ன?

பதவிக்காக இந்தப் பாடு!

பாட்னா, நவ. 26—

மொரார்ஜி தேசாய், ரெட்டி, வியாஸ் ஆகிய மூவரும், பீகார் மாநிலத்தில் பொதுத் தேர்தலுக்கான காங்கிரஸ் அபேட்சகர்கள் பட்டியலைத் தயாரித்து வருகிறார்கள்.

40 வயது கிராமிய ஒரு அரிஜன ஊழியர், மொரார்ஜி தேசாயின் கார்முன் நெடுக வீழ்ந்து, தனக்குக் கடந்த 30 ஆண்டுக்காலமாக காங்கிரஸ் நியமனம் கிடைக்கவில்லை என்றும், வரும் பொதுத் தேர்தலில் நிற்பதற்குத் தனக்குக் காங்கிரஸ் 'டிக்கெட்' தரவேண்டும் என்றும் கோரினார்; யார் என்ன சொல்லியும் அவர் அந்த இடத்திலிருந்து நகரவே இல்லை; பிறகு தேசாய் காரை விட்டு வெளியே குதித்து, அந்த ஊழியரைப் பிடித்து இழுத்து, 'என்ன இது; காங்கிரஸ் டிக்கெட் பெற இது வல்ல வழி' என்று கூறி அவரை அப்புறப்படுத்த வேண்டியதாயிற்றாம்!

கிராமப் பஞ்சாயத்திற்குப் பெண் தலைவி!

நெல்லூர் நவ. 27—

ஆந்திர மாநிலத்தில் உள்ள நெல்லூர் மாவட்டத்தில் அண்டகுண்டல கிராமத்தின் பஞ்சாயத்துத் தலைவியாக சிலகலூர் செங்கம்மாள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

41 காங்கிரஸ்காரர்கள் இராஜினமா

பாட்னா, நவ 28—

பீகார் மாநிலத்தில் மாவட்ட, ஊராட்சி மன்றங்களில் ஏற்கனவே அங்கம் வகித்து பதவியில் இருப்பவர்களுக்கு, வரும் பொதுத்தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களாக நிற்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்று பீகார் மாநிலத் தேர்தல் குழு முடிவு செய்துள்ளது.

இந்த முடிவு அ. இ. கா. க. திட்டத்திற்கு முரணானது என்று குறிப்பிட்டு, 41 காங்கிரஸ் உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை இராஜினமா செய்து விட்டனர்.

தன்னிறைவு எய்துமென நம்பிக்கை?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள் இயந்திரங்கள், வாகனங்கள் ஆகியவற்றைப் பொருத்து இந்திய இரயில்வேக்கள் ஏறக்குறையத் தன்னிறைவு எய்திவிடுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

'சமூக, மதப் புரட்சி வேண்டும்!'

'பொருளாதாரப் புரட்சி மட்டும் போதுமானதல்ல'

'சிந்தனைப் போக்கு மாறுவது அவசியம்'

சாதிமுறைக் கேடு ஒழிய மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராம் கூறும் வழிகள்

அகமதாபாத், நவ. 27—

"அன்னியரின் ஆக்கிரமிப்பு — ஆதிக்கம் இவற்றைவிட, சாதி முறை, இந்தியாவின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்து அதிகமான தீங்கினை விளைவித்திருக்கிறது

"எனவே, சாதி முறையைக் கடைப்பிடிக்கும் இந்து சமூகம், தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றி கொண்டுள்ள எண்ணத்தை மாற்றிக் கொள்வதின் மூலம், ஒரு 'சோஷலிச மாதிரி' சமூக அமைப்பிற்கு உதவ வேண்டுமானால் சமுதாயத்தின் சிந்தனைப் போக்கில் மாற்றம் ஏற்பட்டாக வேண்டும்.

"சிந்தனைப் போக்கில் மாற்றம் ஏற்பட்டாலன்றி, எல்லோருக்கும் எல்லாத் துறைகளிலும் சமத்துவம் அளிக்கும் சோஷலிச மாதிரி சமூகம் காண்பது இயலாததாகிவிடும்.

"சாதி வேறுபாடு இன்றி எல்லோரது வாழ்க்கை நிலைகளும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமானால், சமுதாயத்தின் அமைப்பே மாற்றப்பட்டாக வேண்டும்.

"கம்யூனிஸ்டு நாடுகளில் ஏற்பட்டது போன்ற ஒரு பொருளாதாரப் புரட்சி மட்டுமல்ல—ஒரு சமூக, மதப் புரட்சி இந்தியாவில் ஏற்பட்டாக வேண்டும்."

—என்று, மத்திய செய்திப் போக்குவரத்து மந்திரி ஜெகஜீவன்ராம் குறிப்பிட்டிருக்கிறார்.

குஜராத் தாழ்த்தப்பட்டோர் லீக் மாநாடு ஒன்றில் பேசும்போது மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

மதமாற்றம்

"தாழ்த்தப்பட்டோர், தீண்டாமை இந்தப் பிரச்சினைகளைச் சமாளிக்க வெறும் மதமாற்றம் மட்டும் பலன்தராது.

"இஸ்லாம், கிறித்துவம் போன்ற மதங்கள், இந்து மதத்துடன் தொடர்புகொண்டதினால், இந்த (சாதி) பாகுபாடுகளுக்கு ஆளாகிவிட்டன. புத்தமதத்தில் கூட இந்தப் பிளவுகள் தலைதூக்கலாம். எனவே, மதமாற்றம் பரிகாரமாகாது.

கலப்பு மணம்

"தாழ்த்தப்பட்டோர், தீண்டாமை ஆகிய பிரச்சினைகள் ஒழிய, கலப்பு மணங்கள் நிகழவேண்டும்; அது, ஒரு நல்ல பயனுள்ள வழி என்று கருதுகிறேன்."

ஜோர்டானிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் வெளியேறவேண்டும்

ஒப்பந்தத்தை ஒழிக்கக் கோருகிறது சர்க்கார்

லண்டன், நவ. 27—

1948-ம் ஆண்டு ஆங்கிலோ—ஜோர்டான் ஒப்பந்தத்தை முடித்துக்கொள்ளவும், ஜோர்டானிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகளைத் திரும்பப் பெறச் செய்யவும் ஜோர்டான் சர்க்கார் தீவிரமாக முயற்சிக்கும் என்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அம்மான் வானொலி அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

'சர்க்கார், இராஜதந்திர, அரசியல், பொருளாதார, மற்றெல்லா வழிகள் மூலமாயும் இந்த ஒப்பந்தத்தை ஒழிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு பிரிட்டிஷ் துருப்புகளை ஜோர்டானிலிருந்து வெளியேற்றும்,' என்றும் அந்த வானொலி அறிவிப்புக் கூறுகிறது.

அல்ஜீரியப் பிரச்சினையில் தீர்வு காண...!

ஐ. நா. போலீஸ் படை செல்ல வேண்டுமாம்

வாஷிங்டன், நவ. 26—

அல்ஜீரியாவில் தேசிய வாதிகளுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் நடந்துவரும் போராட்டத்தை நிறுத்தி, பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஐ. நா. முயலவேண்டும் என்று டுனீஷியப் பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார்.

'அங்கு போர் நிறுத்தம் ஏற்பட்டதும் ஐ. நா. போலீஸ் படை ஒன்று அல்ஜீரியாவுக்கு அனுப்பப்படலாம்' என்றார் அவர்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு நிதி உதவி

நீடித்துத் தருவதென முடிவு

புதுடில்லி, நவ 2–—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் குடும்பக் கட்டுப்பாட்டை அமுல் நடத்த சில தனிப்பட்ட தொண்டர் கழகங்களுக்கு நிதி உதவியை நீடித்துத் தருவதென இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், மாநில சர்க்கார்கள், 2,500 குடும்பக் கட்டுப்பாடு மருத்துவமனைகளைத் திறக்கக்கூடுமாம்.

'உரிமையை விட்டுத் தர எகிப்து மறுப்பு

ஐ. நா. படைக்கும் வரையறை

'பிரெஞ்சு, இஸ்ரேல், பிரிட்டிஷ் துருப்புகள் எகிப்தின் எல்லைக்குள் இருக்கும்வரை சூயஸ் கால்வாயைச் செப்பனிடும் வேலைக்கு எகிப்து சம்மதிக்காது' என்று ஐ. நா. சபையில் எகிப்து வெளிநாட்டு அமைச்சர் கூறியுள்ளார்.

எகிப்திய அரசாங்கம் அனுமதிக்கும் வரையில்தான் சர்வ நாடுகளின் படைகள் எகிப்துக்குள் இருக்கலாமென்பதை மீண்டும் அவர் தெளிவாக்கியுள்ளார்.

ஐ. நா. படைகளின் தலைமை நிலையம்

ஐ. நா. படைகளின் தலைமை நிலையம், போர்ட் செய்துக்கு சுமார் 35 மைல் தூரத்தில் வெகு சீக்கிரத்தில் அமைக்கப்படும் என்று மேஜர் - ஜெனரல் பர்ன்ஸ் கூறியுள்ளார்.

சூயஸ் பகுதியில் இந்தியத் துருப்புகள்

160 இந்தியத் துருப்புகள் சூயஸ் பகுதிக்குப் போய்ச் சேர்ந்துவிட்டதாம்: இத்துடன், ஐ. நா. படையில் 1,415 பேர் உள்ளனராம்.

6,000 இரும்பு-உருக்குத் தொழிலாளருக்கு போனஸ்

பத்ராவதியில் உடன்பாடு-நிபந்தனை

பத்ராவதி, நவ. 27—
ஒவ்வொரு ஆண்டும் அதிகபட்சமாக மூன்று மாத போனஸ் தருவது என்று இங்கு மைசூர் இரும்பு—உருக்கு தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும் தொழிலாளருக்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இதனால் 6,000 தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

ஒப்பந்த காலத்தில், தொழிலாளர்கள் புதிய கோரிக்கைகளை எழுப்பவோ வேலை நிறுத்தங்களில் ஈடுபடவோ கூடாது என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறதாம்.

கல்கத்தாவில் மின்சார இரயில்கள் ஓடுமாம்

ரூ. 12 கோடி செலவிடப்படும்

புதுடில்லி, நவ 27—
1957 ஜூலை மாதத்திற்குள் கல்கத்தா சுற்றுப்புறங்களில் முதல் மின்சார வண்டி ஓட ஆரம்பித்துவிடும் என்றும், இதற்காக ரூ. 11,84,00,000 செலவிடப்படும் என்றும் இரயில்வே உதவி அமைச்சர் அளகேசன் மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

கைத்தறி துணிகளின் தரம் உயர்ந்தால்!

அமெரிக்கக் குழு கருத்து

புதுடில்லி, நவ. 27—
"நூல், சாயம் உள்பட எல்லாம் உயர்ந்த ரகமாகவும், அமெரிக்க மார்க்கெட்டுகளுக்கு ஏற்றமாதிரியாகத் துணிகளைத் தயாரிக்க ஒரு தனி நிறுவனம் அமைத்தும், அமெரிக்காவில் கிராக்கி ஏற்படக்கூடிய துணி ரகங்களை கேட்டறிந்தும் இந்தியக் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்படுமானால், இப்போது மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அவ்வளவு கைத்தறித் துணிகளையும் அமெரிக்காவே வாங்கும்" என்று இந்தியாவில் இரண்டு மாத காலம் பல கைத்தறி உற்பத்தி நிலையங்களைப் பார்வையிட்ட அமெரிக்கக் குழு கூறியுள்ளதாம்.

மாநிலங்கள்தோறும் அபிவிருத்திக் குழுக்கள்

தொழில் வளங்களைப் பரிசீலனை செய்யுமாம்

புதுடில்லி, நவ. 26—
ஒவ்வொரு மாநிலத்திலும் தொழில் முக்கியஸ்தர்கள், அதிகாரிகள், நிபுணர்கள் ஆகியவர்களைக் கொண்ட அபிவிருத்திக் குழுக்கள் விரைவில் ஏற்படுத்தப்படுமாம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், தாலுகாக்களிலும் உள்ள தொழில் வளங்களைப் பரிசிலனை செய்வதே இந்தக் குழுவின் நோக்கமாக இருக்குமாம்.

இப்போது 4 மண்டல அபிவிருத்திக் குழுக்கள் உள்ளன; பின்னர் இவை 8 அல்லது 16 குழுக்களாக உயர்த்தப்படுமாம்.

'பயனற்ற திட்டம்'

'நாட்டிற்கும் நலன் தராது'

பெங்களூர், நவ. 24—
"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இப்போதுள்ள நிதியில் நாட்டுக்கு நலன் பயக்கத்தக்கதல்ல; அடியோடு திருத்தப்பட்டாலன்றி பாமர மக்களுக்கு பயனற்றதாக இருப்பது மட்டுமல்ல—சர்வோதயத்திற்கும் சோஷலிச அடிப்படையில் நாட்டை அமைப்பதற்கும் அது வழிகாட்டாது" என்ற தீர்மானத்தை பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சியின் தேசிய நிர்வாகக் கமிட்டி நிறைவேற்றியுள்ளது.

எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம்

இப்போது ஆண்டுக்கு 10-இலட்சம் டன்களாக இருக்கும் நல்லெண்ணெய் உற்பத்தி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 50,000 வார்தா செக்கு'களைப் புகுத்துவதின்மூலம் 20 இலட்சம் டன்களாக உயர்த்தப்படவிருக்கிறதாம்.

தமிழ் நாட்டிற்குக் கோதாவரி தண்ணீர்!

நிலைமை பற்றி காமராசர்

சென்னை, நவ. 27—
கோதாவரி நதியின் உபரி நீரை சென்னைக்குத் தருவது என்பதை கொள்கையளவில் ஆந்திர முதன் மந்திரி சஞ்சீவரெட்டி ஒப்பியிருக்கிறார்.

இந்தத் தகவலைத்தந்த காமராசர், சஞ்சீவரெட்டி வரும் டிசம்பர் 10-ல் சென்னை வரும்போது, இது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும், கோதாவரி நீரை உபயோகப்படுத்துவது பற்றி பூர்வாங்க சர்வே ஏற்பாடுகளும் செய்யப்படும் என்றும் கூறியிருக்கிறார்.

கோதாவரி தண்ணீர் இரு மாநிலங்களிலும் எவ்வளவு ஏகர் நிலத்திற்குப் பயன்படுமோ அதன் அடிப்படையில் திட்டத்தின் செலவை இரு அரசாங்கங்களும் பகிர்ந்து கொள்ளலாம் என்றும் காமராசர் தெரிவித்துள்ளார்

மண்டலக் குழுவிற்கு ஆந்திரப் பிரதிநிதிகள்

ஐதராபாத், நவ. 27—
தென் மண்டலக் குழுவில் ஆந்திர மாநிலப் பிரதிநிதிகளாக சஞ்சீவிரெட்டி, கானா வெங்கடராவ், ரங்கா ரெட்டி ஆகிய மூன்று அமைச்சர்கள் இடம்பெறுவார்கள்.

'நீதி—நிர்வாக நலனுக்கு நல்லதல்ல'

சட்டக் குழு முடிவு பற்றி அமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ 26—
நீதிமன்றங்களின் பல பிரிவுகள், பல இடங்களில் அமைக்கப்படுவது நீதி—நிர்வாக நலனுக்கு நல்லதல்ல என்று சட்டக் குழு முடிவு தெரிவித்திருப்பதாக மக்கள் சபையில் அமைச்சர் பிஸ்வாஸ் கூறியுள்ளார்.

மத்திய அமைச்சரின் முடிவு இறுதியானது?

சென்னை, நவ. 27—
சென்னை—ஆந்திரா வடஎல்லைப் பிரச்சினையில் தீர்வு காண்பதற்காக இந்திய அரசாங்கம் நியமித்துள்ள அமைச்சர் படாஸ்கர், டிசம்பர் 10-ந்தேதி சென்னை வருகிறாரென்றும், அவரது முடிவை சென்னை சர்க்காரும், ஆந்திர சர்க்காரும் ஒப்புக்கொள்வார்களென்றும் காமராசர் கூறியுள்ளார்.

பக்தர்கள் பார்வைக்கு!

திருமலை, நவ. 26—
திருமலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் புலி, சிறுத்தை, கரடி ஆகிய மிருகங்கள் அதிகமாக உள்ளனவாம். சென்ற ஒரு வாரத்தில் ரூ 1,500 மதிப்புள்ள 10 எருமைகளை புலி ஒன்று கொன்றுவிட்டதாம்; இதனால் நாளுக்கு நாள் மக்களுக்குப் பீதி ஏற்பட்டுவருகிறதாம்.

நடிப்பிசைப் புலவருக்கு விருந்து



அண்மையில் மலேயா, சிங்கப்பூர் சென்று வெற்றிகரமான கலைப்பணி ஆற்றித் திரும்பிய நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களுக்கு கடந்த 25—11—56 அன்று சென்னை 'அறிவக'த்தில் நடைபெற்ற தேநீர் விருந்தின்போது இராமசாமி நன்றி தெரிவித்துப் பேசுகிறார். அண்ணா, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ஆகியோரைப் படத்தில் காணலாம்.
—போட்டோ : சாமுவேல்

'நீதி அரசர்களின் தீர்ப்பை பண்டாரநாயகா கவனிப்பாரா?'

'நேர்மையற்ற முறையில் மனுக்களை நிராகரிப்பது பரிகாரமாகாது'

'இலங்கை இந்தியர் நாடற்றவர்களாக்கப்படுவது மனித நீதியன்று'

"இந்தியப் பிரஜைப் பதிவுச் சட்டத்தை எவ்வளவு நேர்மையற்ற முறையில் சில உப-கமிஷனர்கள் அமுல் நடத்துகிறார்கள் என்பதை, நேற்று முன்தினம் இலங்கை சுப்ரீம் கோர்ட்டைச் சேர்ந்த இரு நீதி அரசர்கள் அளித்துள்ள இரு முக்கியத் தீர்ப்புகளும் அதில் கொடுத்துள்ள கண்டனங்களும் தெளிவாகக் காட்டும்.

"முதல் வழக்கில் கொழும்பைச் சேர்ந்த திரு. சூரியநாராயணன், தமது மனைவி தம்முடன் இங்கு தொடர்ந்து வசித்ததை நிரூபிக்க, குவாரண்டைன் இலாகாவிலிருந்து வாங்கிய சர்டிபிக்கேட்டைச் சமர்ப்பித்திருந்தார். இலங்கை வந்ததும் 14 நாட்கள் குவாரண்டைனில் கைகாட்ட வேண்டியது சட்டம்; இன்றேல், சுகாதார இலாகா நடவடிக்கை எடுத்திருக்கும் இது தெரிந்திருந்தும், டிபுடி கமிஷனர், மனுதாரின் மனைவி இலங்கையில பெயர் கொடுத்த இரண்டு நாட்கள் மட்டுமே இருந்ததாகக் கருதியுள்ளார்; அதாவது, இங்கு பெயர் கொடுப்பதற்காக மட்டும் அவர் இந்தியாவிலிருந்து இலங்கை வந்திருப்பதாயும், இங்கு வசிக்க வரவில்லையென்றும் கருதி, மனுவை நிராகரித்துவிட்டார். இது அந்த அதிகாரியின் பாரபட்ச மனப்பான்மையைக் காட்டுவதாக நீதிபதி சரியாகக் கண்டித்துள்ளார்.

"உணவு காரியாலயத்தில் தம் மனைவிக்குக் கூப்பன் எடுத்துள்ளதாயும், ஆனால் அந்த லிஸ்ட்டைத் தம்மால் பெறமுடியவில்லை என்றும், உணவு காரியாலயத்தில் விசாரித்தால் அது கிடைக்கலாமென்றும் மனுதார் தெரிவித்திருந்தும், டிபுடி கமிஷனர் இவ்விஷயத்தைக் குறித்து விசாரிக்க எவ்வித முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை.

"இதுபோன்ற விஷயங்களில் விசாரிக்க எவ்வித முயற்சியையும் செய்யவில்லையாயின், விசாரணை அதிகாரிகளை நியமித்திருப்பதில் அர்த்தமேயில்லை என்று நீதிபதிகள் சூடு கொடுத்துள்ளனர்.

"மற்றொரு அப்பீல், மாத்தளையைச் சேர்ந்த திரு அடைக்கன் என்ற தோட்டத் தொழிலாளியினுடையது; இதில், அவரது குழந்தைகள் இங்கு தொடர்ந்து வசித்ததற்கு ருசுவில்லை என்று கூறி உதவி கமிஷனர் மனுவைத் தள்ளிவிட்டார்.

"தொழிலாளரின் குழந்தைகளை இந்தியாவுக்கு, பாட்டன், பாட்டி அழைத்துச்செல்வது வழக்கமென்றும், அவ்விதம் மனுதாரரின் குழந்தைகள் சென்றிருக்கக் கூடுமென்றும் டிபுடி கமிஷனர் கற்பனை செய்துகொண்டு மனுவை நிராகரித்துள்ளார்.

"இப்படியான வழக்கமிருப்பதை ருசுப்படுத்த ஆதாரமில்லை என்றும் இதை அதிகாரி தம் கவனத்துக்கு எடுத்துக்கொண்டிருக்கப்படாதென்றும், நீதி அரசர்கள் இடித்துக் கூறியிருக்கிறார்கள்.

"'முன்னர் பல தடவை சுப்ரீம் கோர்ட் பலமான கண்டனங்கள் தெரிவித்துள்ளது. என்றாலும், பிரஜாபதிவு இலாகா உபகமிஷனர்கள், பகுத்தறிவைப் பயன்படுத்தாமலும் நியாயம் செய்ய வேண்டுமென்ற ஆவலும் எண்ணமும் இல்லாமலும் பிரஜா உரிமை மனுக்களைத் தொடர்ந்து பட்டுவாடாச் செய்து வருவதாகத் தோன்றுகிறது' என்றுகூறி, இரு அப்பீல் மனுக்களையும் அனுமதித்த உப கமிஷனர்கள் நடத்தும் விசாரணை முறையையும் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்கள்.

"நேர்மையாக விசாரணை நடத்தும் சில உப கமிஷனர்கள் இருக்கலாம்; ஆனாலும், சுப்ரீம் கோர்ட்டின் இரு நீதி அரசர்களும் தெரிவித்துள்ள இந்தப் பலமான கண்டனத்தை பிரஜா பதிவு இலாகாவோ அல்லது அதன் பொறுப்பை ஏற்றுள்ள பிரதம மந்திரியோ அலட்சியம் செய்ய முடியாது. முன்னர் சுப்ரீம்கோர்ட்டார் அளித்துள்ள பல தீர்ப்புகளிலும் இவ்விஷயத்தைக் குறிப்பிட்டிருந்தும், அந்த இலாகாவின் மனப்பான்மையில் எவ்வித நல்ல மாறுதலும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இந்நிலையில், பல்லாயிரக் கணக்கானவர்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டு, அவர்கள் நாடற்றவர்களாகப் பரிதவிக்கவேண்டிய நிலையில் உள்ளனர்.

"இம்மனுக்களை இன்னும் சில மாதங்களில் பட்டுவாடா செய்துவிடலாமென்று கூறப்படுகிறது. மேற்குறித்த நேர்மையற்ற முறையில் மனுக்களை நிராகரித்துவிடுவதால் பிரச்சினை தீர்ந்துவிடாது. சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ளும் வசதி எளிய மக்களுக்கில்லை. தோட்டத் தொழிலாளரில் பெரும்பாலோரும் எளிய மக்கள்; ஆகவே அப்பீல் செய்துகொள்ளாதவர்கள் அனைவரையும் நாடற்றவர்களாக்கி, நாட்டைவிட்டு வெளியேற்ற முற்படுவது மனித நீதியாகாது. இவ்விஷயமாக இலங்கை, இந்தியப் பிரதம மந்திரிகள் நேரில் கலந்து பேசவேண்டிய சந்தர்ப்பம் சீக்கிரத்தில் ஏற்படலாம். அப்போது இதைப் பற்றி அடியோடு புனராலோசனை செய்து ஐக்கிய நாட்டு மனித உரிமை சாசனத்துக்கிணங்க, இதை நியாயமான முறையில் தீர்க்க முயற்சி செய்யப்பட வேண்டும்."

—இவ்வாறு, இலங்கை [illegible]யான 'வீரகேசரி' 22-11-56 தேதிய இதழின் தலையங்[illegible] குறிப்பிட்டுள்ளது.

மீண்டும் அதே பல்லவி

புதுடில்லி, நவ. 26—
கோதுமை, மற்ற உணவுத் தானியங்கள், பருத்தித் துணிகள் ஆகியவைகள்மீது முன்பணம் தருவதைப் பாங்கிகள் கட்டுப்படுத்த வேண்டுமென சர்க்காரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நல்ல பலன் தந்துள்ளதென்றும், விலைவாசிகள் உயர்வு சிறிது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் மக்கள் சபையில் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியுள்ளார்.

சென்ற மாதம் முன்பணம் ரூ. 24,77,00,000 அளிக்கப்பட்டதாம்; இந்த மாதம் ரூ.4,43,00,000 மட்டுமே முன்பணம் அளிக்கப்பட்டுள்ளதாம்.

பம்பாயில் எதிர்க் கட்சிகளின் சாதனை

பம்பாய், நவ. 26—
பம்பாய் மாநில சட்ட சபை உறுப்பினர்களுக்கு மாதம் ரூ. 200 சம்பளமாக அரசாங்கம் உயர்த்தியிருக்கிறது

ஆனால், சட்டசபை எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.-க்கள் இந்தச் சம்பளத்தை மாதம் ரூ. 150 ஆகக் குறைத்துவிட வேண்டும் என்று ஒரு திருத்தத்தை கொண்டுவந்தனர்; திருத்தத் தீர்மானத்தை சட்டசபை நிறைவேற்றியுள்ளது.

மக்கள் சபை

ஏப்ரலில் கலைக்கப்படும்

புதுடில்லி, நவ. 28—

வரும் 1957-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியோடு மக்கள் சபையைக் கலைத்துவிடுவதென டில்லி சர்க்கார் முடிவு செய்திருக்கிருர்களாம்.

பொதுத் தேர்தல்

பொதுத் தேர்தலை மார்ச் முதல் இரண்டு வாரங்களில் நடத்திவிடலாம் என்று பண்டித நேரு சில நாட்களுக்கு முன்பு தெரிவித்தது நினைவிலிருக்கலாம்.

மாணவர்களுக்கு விடுதிகள்

கட்டுவதற்குக் கடன் உதவியாம்

புதுடில்லி, நவ 28—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மாநிலப் பல்கலைக் கழகங்களுக்கு வட்டியில்லாமல் கடனுதவி அளித்து மாணவர்களுக்கு விடுதிகள் கட்டுவதற்கு உதவி புரிய இந்திய அரசாங்கம் நியமித்துள்ள பல்கலைக் கழக மானியக் குழு சிபாரிசு செய்துள்ளதாகவும், மத்திய சர்க்கார் கடன் தருமென்றும், 25 தவணைகளில் இக்கடன் திரும்பப் பெறப்படுமென்றும் மாநிலங்கள் சபையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இடைநிலைப் பள்ளிகளில் விடுதிகள் கட்டுவதற்குக் கடன் உதவி அளிப்பது பற்றி சர்க்கார் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறதாம்.

சென்னை நகர முக்கிய சாலைகள் செப்பனிடப்படும்

ரூ. 3¾ இலட்சம் அனுமதி

சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக சென்னை நகரத்தில் உள்ள பிரதான ரோடுகளும், முக்கியமான சாலைகளும் மிகவும் மோசமான நிலையில் உள்ளது; பெரும்பாலும் எல்லாச் சாலைகளும் புதிதாக சீர்படுத்தி அமைக்கப்படவேண்டியுள்ளது. ஆகவே, இவைகளைச் செப்பனிடுவதற்காக சென்னை நகரசபை கமிஷனர் ரூ. 3¾ இலட்சம் அனுமதித்துள்ளதாகத் தெரிகிறது.

'கலைஞர்களின் ஏழ்மை நிலையைக் கவனியுங்கள்'

'பதக்கங்கள் வழங்காதீர்— பண உதவி தாருங்கள்'

ஐதராபாத், நவ. 25—

"கலைஞர்களைப் பாராட்டி பதக்கங்கள் வழங்குவதற்குப் பதிலாக அவர்களது பொதுவான ஏழ்மை நிலையைக் கருதி பண உதவி செய்வதே நன்மை தரக்கூடியதாகும்"

என்று ஆந்திரப் பிரதமர் சஞ்சீவி ரெட்டி, கலைக் கண்காட்சி ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

அண்ணு கருத்துரை...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பிறரும் என்ன கருதுகிருர்கள் என்பதல்ல, கவனிக்கவேண்டியது. நம்முடைய நெஞ்சம் என்ன சொல்லுகிறது என்பதைத்தான் கவனிக்கவேண்டும். நாட்டு மக்கள்தான்—அவர்களது நிலைதான்—நமக்கு ஆசானே தவிர வேறெதுவுமல்ல!

"மக்கள் எண்ணிப்பார்க்கவேண்டியதெல்லாம், 'கடந்த காலத்தில் உங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி வேலை செய்தோமா, இல்லையா?'—என்பதைத்தான்! அப்படி வேலை செய்திருக்கிருேம் என்று நான் நம்புகிறேன்.

"உங்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, கடந்த காலத்தில் வேலை செய்து வருவதைப்போலவே, சட்ட சபைக்குச் சென்று அங்கும் வேலை செய்வோம்

"அங்கு சென்று நாங்கள் வேலை செய்வதின்மூலம், உலகம் நம்மைப் பற்றித் தெரிந்துகொள்ள வழி செய்வோம்."

திருவனந்தபுரம் போராட்டத்தில் தி. மு. க. தோழர்கள் பங்கேற்றனர்

நேரடி நடவடிக்கை நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது

திருவனந்தபுரம், நவ. 27—

திருவனந்தபுரத்தில் உயர் நீதிமன்றக் கிளை ஒன்று நிறுவக் கோரி வழக்கறிஞர்கள் நடத்திவரும் போராட்டத்திற்கு ஆதரவாகக் கடந்த 19—11—56 அன்று நடைபெற்றப் பொது வேலைநிறுத்தத்திலும், மாலை நடைபெற்ற சர்வகட்சி ஊர்வலத்திலும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் கலந்துகொண்டு தங்கள் பங்கினைச் செலுத்தியிருக்கின்றனர்.

24-ந் தேதி முதல் நடைபெறும் மறியல் போராட்டத்திலும் கழகத் தோழர்கள் பலர் கலந்துகொள்ள முடிவு செய்திருக்கின்றனர்.

உதட்டுச் சாயம்

ஆடம்பரப் பொருள் அல்லவாம்!

அற்புதமான ஆயுதமாம்!

வாஷிங்டன், நவ. 28—

"தற்காலத்தில் ஆண்களுக்கு 'ரேசர் பிளேட்' எப்படியோ, அப்படித்தான், பெண்களுக்கு உதட்டுச் சாயமும்!"

இப்படிக் கூறியிருக்கிருர், அமெரிக்கப் பெண் ஒருவர்!

உதட்டுச் சாயம், 2 கோடி அமெரிக்கப் பெண் தொழிலாளர்களுக்கு தங்கள் வேலையைப் பாதுகாக்கவோ அல்லது புதிய நல்ல வேலைகள் தேடவோ மிக அவசியமான ஒரு ஆயுதம் என்றும் அவர் கூறியிருக்கிருர்.

'உதட்டுச் சாயம் போன்றவை, ஆடம்பரப் பொருட்கள் என்ற நிலை மாறிவிட்டது; எனவே, அவற்றிற்கு வரி விதிப்புக் கூடாது' என்று, ஜெனத் மேயர்ஸ் என்ற அந்த அம்மையார் கூறியிருக்கிருர்.

அமெரிக்காவில் 10-ல் ஒருவருக்கு மனோவியாதி!

நியூயார்க், நவ. 27—

அமெரிக்காவில், பத்தில் ஒருவருக்கு மனோ வியாதி இருக்கிறதாம்!

சுமார் 12,000 பேர்களை 4,000 இல்லங்களில் ஆராய்ச்சி செய்த பின், இந்தக் கருத்தினை அமெரிக்க விஞ்ஞானிகள் சிலர் அளித்திருக்கின்றனர்.

இந்தியாவில் சீனப் பிரதமர்

புதுடில்லி, நவ. 28—

சீனப் பிரதமர் சூ-யென்-லாய், இந்திய ஏர்லைன்ஸ் விமானத்தின் மூலம் புதுடில்லி வந்துசேர்ந்துள்ளார்.

இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு அவர் ஒரு முறை இந்தியா வந்துள்ளார்.

பாலம் விமான நிலையத்தில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவரை வரவேற்று இந்தியில் பேசிய பண்டித நேரு, 'இம்முறை அவர் நவ இந்தியாவின் முன்னேற்றத்தைக் காண்பார்' என்ருர்

நன்றி செலுத்திப் பேசுகையில் சீனப் பிரதமர், 'என்னுடைய இந்த வருகையால் நம் நட்பு பலப்படும்; உலக விவகாரங்களில் நாம் நெருங்கி ஒத்துழைத்து வருகிருேம். பஞ்சசீலத்தை நம்பிப் பின்பற்றுபவர் நாம்,' என்று குறிப்பிட்டார்.

கோட்டயம் – கொல்லம் இரயில் பாதை

புதுடில்லி, நவ. 28—

கோட்டயம்—கொல்லம் இரயில் பாதை அமைப்பு 1957 செப்டம்பரில் முடிந்துவிடுமாம்.

ஏன் ஆதரவு இல்லை?

ஜனதா இரயிலுக்கு தென்னிந்தியாவில் போதிய அளவில் ஆதரவு இல்லை என்றும், அந்த வண்டிகளில் மேல் வகுப்புப் பெட்டிகளுக்கு மட்டுமே தேவை இருந்து வருவதாகவும் மக்கள் சபையில் தகவல் தரப்பட்டுள்ளது.

போராட்டம் நிறுத்தம்

திருவனந்தபுரம், நவ. 28—

கடந்த 20 நாட்களாக இங்கு வழக்கறிஞர்கள் நடத்தி வந்த போராட்டம் இன்றுடன் நிறுத்தப்பட்டிருக்கிறது.

நேற்று கவர்னர் தந்த உறுதிமொழியின்பேரில் 'நேரடி நடவடிக்கை' நிறுத்தப்பட்டிருப்பதாகவும், போராட்டக் குழுவின் சார்பில் தூதுக் குழு ஒன்று கவர்னரைச் சந்திக்கவிருக்கிறது என்றும் தெரியவருகிறது.

100 பேர் மறியல்

நேற்று திருவனந்தபுரம் நீதிபதிகள், முன்சிப்புகள் ஆகியோர் முன்னிலையில் பல வழக்கறிஞர்கள், குமாஸ்தாக்கள் ஆகியோர் சுமார் 100 பேர் மறியலில் ஈடுபட்டனர் என்றும், அமைதியான மறியலில் ஈடுபட்ட அவர்களை போலீசார், நீதிமன்றக் 'காம்பவுண்'டுக்குள்ளிலிருந்து வெளியேற்றினர் என்றும் தெரியவருகிறது.

மக்கள் சபையில்!

திருவனந்தபுரம் வழக்கறிஞர் கிளர்ச்சி குறித்து மூன்று கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் மக்கள் சபையில் ஒத்திவைப்பு பிரரேபனை ஒன்று கொண்டுவந்தனர்.

100 பேருக்குத் தண்டனை

அதில், பல வழக்கறிஞர்கள், முன்னுள் சட்டசபை உறுப்பினர்கள் உட்பட சுமார் 100 பேர் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர் என்று குறிப்பிட்டிருந்தனர்.

நிராகரிப்பு

ஆனல் இந்தப் பிரரேபனையை உதவி சபைத் தலைவர் நிராகரித்திருக்கிருர்.

குறைந்த அளவு!

'தண்டனை மிகச் சொற்பமானதாகவே தரப்பட்டிருக்கிறது; கிளர்ச்சிக்காரர்கள்தான், சட்டத்தைத் திட்டமிட்டு மீறினர்; எனவே, அவர்களது செயலை சர்க்கார் அலட்சியம் செய்திருந்தால், அவர்களது கிளர்ச்சியின் நோக்கமே ஈடேறியிருக்காது" என்று பண்டித பந்த், மக்கள் சபையில் கூறியிருக்கிருர்.

சாதிமுறைக் கேடுகள்

ஒழிப்பதற்கு இலங்கையில் சட்டம்

கொழும்பு, நவ 29—

சாதியைக் காரணமாகக் காட்டி சமூகத்தில் சிலருக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் துடைக்க இலங்கை சர்க்கார் நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

இதற்காக ஒரு மசோதா தயாராகிவிட்டது என்றும், மக்கள் சபையின் அடுத்த கூட்டத்தில் மசோதா கொண்டுவரப்படும் என்றும் கூறப்படுகிறது.

இந்த மசோதா, இலங்கை குடியரசாகும்போது அதன் அரசியல் சட்டத்தில் இடம் பெறும் என்றும் தெரிகிறது.

வடக்கு இலங்கையில் சாதிமுறை பின்பற்றப்படுவதால், சில சாதிக்காரர்களுக்கு சமூகத்தில் இதரருக்குக் கிடைக்கும் பொது உரிமைகள் தரப்படுவதில்லை என்றும் தெரியவருகிறது.

திருப்பூர் ஆலைத் தொழிலாளர்கட்கு

வேண்டுகோள்

"திருப்பூர் நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்தல் நிதி திரட்டும் பணி தலைமைக் கழக அனுமதியுடன் துவக்கப்பட்டிருக்கிறது. நமது நகர ஆலைத் தொழிலாளர்கள் சார்பில் ஒரு குறிப்பிட்ட—கணிசமான தொகையைத் தேர்தல் நிதியாகத் திரட்டுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் திருப்பூர் தனலட்சுமி, எஸ். ஆர். சி., ஆஷர் ஆகிய ஆலைகளைச் சேர்ந்த கழகச் சார்புடைய தொழிலாளர்கள் கூட்டம் ஒன்று, நகர 'டிராவலர்ஸ் பங்களா'வில் 1-12-56 மாலை 5 மணிக்கு நடைபெறும். அக்கூட்டத்தில் தொழிலாளத் தோழர்களிடை தேர்தல் நிதி திரட்டுவதற்கென தொழிலாளர் குழு தேர்ந்தெடுக்கப்படும்.

"எனவே, மேற்படி ஆலைகளைச் சேர்ந்த தொழிலாளத் தோழர்கள், இயக்க உறுப்பினர்கள், அனுதாபிகள் அனைவரும் தவருது வருகை தந்து தேர்தல் நிதியில் நமது நகரத்தின் பங்கையும் தொழிலாளர் பங்கையும் வெற்றிகரமாக நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்,"

என்று, திருப்பூர் நகர தி மு கழகச் செயலாளர் மு முத்து ரத்தினம் அறிவிக்கிருர்.

நியாயவிலைக் கடைகளில்!

18 - வயதுக்கு மேற்பட்டவரே அரிசி வாங்கலாமாம்

18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே நியாய விலைக் கடைகளில் அரிசி தரப்படும் என்று சர்க்கார் அறிவித்திருக்கிறது.

சிறுவர்களை 'கியூ'வில் நிறுத்தி குறைந்த விலை அரிசி வாங்கச் செய்து, தங்களிடமுள்ள அரிசியோடு கலந்து அதிக விலைக்கு விற்று, சில வியாபாரிகள் கொள்ளை இலாபம் சம்பாதிக்க முற்பட்டிருப்பதாகப் புகார் கூறப்பட்டதின் பேரிலேயே சர்க்கார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பொது மக்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி!

சென்னையில் நிலையம் ஆரம்பம்

16 வயதிற்குமேற்பட்டு 45 வயதிற்குட்பட்டவர்களுக்கு ஞாயிறுதோறும் காலை 7 மணி முதல் மாலை 9 மணிவரை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில், பொது மக்களுக்குத் துப்பாக்கி சுடப் பயிற்சியளிக்க ஒரு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னையில் வசிப்பவர்கள் யார் வேண்டுமானுலும் இந்த நிலையத்தில் சேரலாம்.

முதலில் டிபாசிட் ரூ 5; ஆண்டு சந்தா ரூ. 3 கட்ட வேண்டும்.

துப்பாக்கிச் சுடும்போது, ஒவ்வொரு ரவுண்டுக்கும் 0—1—3 வீதம் கட்டணம் செலுத்த வேண்டும்.

மூன்று மாதங்களில்.......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்த விபத்துக்களில் 344—இரயில்வே ஊழியர்களினுலும், 25—இரயில்வே ஊழியரல்லாதாராலும், 88—சாதனக் கோளாறுகளினுலும், 21—பாதைக் கோளாறுகளினுலும், 79—இதர காரணங்களினுலும் நிகழ்ந்தன என்றும், 107 விபத்துக்கள் பற்றி விசாரணை நடைபெறுகின்றது என்றும் உதவி மந்திரி கூறியிருக்கிருர்.

கே. வி. கே. சாமி நினைவு மன்றத் திறப்புவிழா

கருணாநிதி கலந்து கொள்வார்

1—12—56 மாலை 6-மணிக்கு சென்னை — திருவொற்றியூர் தாங்கல் பஸ் நிலையத்திற்கு அருகில் தோழர் எஸ். ஜி. வெங்கடராமன் தலைமையில் கே. வி. கே. சாமி நினைவுமன்றத் திறப்பு விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

தோழர்கள் மு. கருணாநிதி, கே. எம். கண்ணபிரான், எஸ். மாசிலாமணி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சிங்கப்பூரில் தமிழர் விழா

கி. ஆ. பெ. விசுவநாதம் கலந்துகொள்வார்

சிங்கப்பூர் கிள்ளான், கோலாலம்பூர், செரம்பான், கோலக்கஞ்சார் ஈப்போ, பினங்கு முதலிய நகரங்களில் இந்த ஆண்டு தை முதல் நாள் தொடங்கி நடைபெறவிருக்கும் தமிழர் திருநாட்களில் கலந்துகொள்வதற்காக வந்த அழைப்பை திருச்சி திரு கி. ஆ. பெ. விசுவநாதம் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், டிசம்பர் மாத இறுதியில் சென்னையிலிருந்து விமானம்மூலம் சிங்கப்பூருக்குச் செல்லக்கூடும் என்றும் தெரியவருகிறது.

நெல்லை மாவட்டத்தில் சத்தியவாணிமுத்து

சுற்றுப்பயணம்

டிச. 1 : கோவில்பட்டி
,, 2 : தூத்துக்குடி
,, 3 : சங்கரன்கோவில்
,, 4 : ஆலங்குளம்

இப்பொதுக்கூட்டங்களில் நெல்லை மாவட்ட தி. மு. கழகத் துணைச்செயலாளர் டபிள்யூ. டி. துரைசாமியும் கலந்து கொள்வார்.

ஏ. கே. வில்வம்

சுற்றுப்பயணம்

நவ. 30 : விராலிமலை
டிச. 2 : ஆம்பூர்
,, 9 : பெங்களூர்
,, 16 : சிவகாசி

குறிப்பு :—சிவகாசி, விராலிமலை நிகழ்ச்சிகளில் மட்டும் அருண்மொழி—வில்வம் கலந்துகொள்வார்.

'வாலாசாபாத் இன்பத் தரைச் செலவு'

சென்னை மாணவர் மன்றச் சார்பில், 9-12-56 ஞாயிறு காலை 6-25 மணிக்குச் சென்னை கடற்கரைப் புகைவண்டி நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்று, அன்று மாலையே திரும்பிவந்துவிடக் கூடிய வகையில் ஓர் இன்பப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்வித் துறைத் தலைவர்களாலும் அறிஞர் பெருமக்களாலும் போற்றிப் புகழப்பெறும் வாலாசாபாத்இந்துமத பாடசாலையை காண விரும்பும் அனைவரும் இக்குழுவில் கலந்துகொள்ளலாம். போயவருவதற்குரிய புகைவண்டிச் செலவு மட்டும் கலந்து கொள்பவர்கள் ஏற்றல் வேண்டும். உணவு வசதியைப் பாடசாலையார் கவனித்துக் கொள்வர்.

பயணத்தில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் 3-12-56-ந் தேதிக்குள், 34, ஆயலூர் முத்தையா முதலி தெருவில் உள்ள மாணவர் மன்ற அலுவலகத்திற்குச் செய்தி அறிவித்தல் வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நூரியாநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.